# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 13/மா/2025

நாள்:30.03.2026

R. மயில்சாமி
மதுரை --- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
மண்டலம் 2 (வடக்கு)
மதுரை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

மதுரை–18, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவரின் 14.10.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2024 அன்று பெறப்பட்டு 13/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும்ஆணை வெளியிடப்படுகிறது:

மதுரை–18, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவர் தனது 14.10.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

“மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண் 1 புதுவிளாங்குடி, மதுரை 18–ல் புதுவிளாங்குடி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை பேருந்து நிறுத்தத்திற்கு தெற்கு புறத்தில் கதவு எண் 108–ல் உள்ள நைலான் வணிக வளாகம் (Nylon Complex) கட்டிடம் சுமார் 15 சென்ட்க்கும் மேலான இடமாகும். இந்த இடமானது மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான இடம் ஆகும். இந்த இடத்தின் தற்கால சந்தை மதிப்பு ரூ.6 (ஆறு) கோடியாகும். இந்த வணிக வளாகத்தில் முத்தூட் பைனான்ஸ், மீனாட்சி ஸ்வீட் & பேக்கரி, விசாலினி மகளிர் தையல் கடை, ஸ்ரீபார்வதி மெடிக்கல், யுவர்ஜாய்ஸ் சலூன் கடை, குளோபல் கம்ப்யூட்டர் சென்டர் மற்றும் சில கடைகள், மருத்துவமனைகள், வீடுகள் கட்டப்பட்டுள்ளது மேற்படி வணிக வளாகம், வணிக கட்டிடம் (Commercial Building) என்பதால் நகர் ஊரமைப்பு திட்டத்தில் திட்ட ஒப்புதல் பெற வேண்டும். ஆனால் திட்ட ஒப்புதல் பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் வணிக வளாகத்திற்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு (Car Parking) இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் நைலான் வணிக வளாக கட்டிடத்திற்கு நான்கு புறமும் இடைவெளி இடம் (set back) விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

மேற்படி வணிக வளாகம் கட்டப்பட்ட இடமானது மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்ட (Nylon Complex) கட்டிடத்தை முற்றிலும் அகற்ற

(Removal) வேண்டி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், உதவி ஆணையர், மண்டலம் 2 (வடக்கு) அவர்களுக்கும் 26.12.2023 தேதியில் பதிவு தபாலில் அனுப்பப்பட்டும் RT 406 2806 19 IN இன்று வரையிலும் எந்தவொரு சிறு நடவடிக்கையும் மாநகராட்சி அலுவலர்கள் எடுக்க முன் வரைவில்லை. கட்டிட உரிமையாளரிடம் ஏதோ ஒரு பலனை பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது தெளிவாகிறது. மாநகராட்சி சொத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்ட நைலான் காம்ப்ளக்ஸ் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க தவறிய முன்னால் உதவி ஆணையர் மண்டலம் 2 (வடக்கு) அவர்கள் மீதும் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான கடுமையானஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்தும், அக்கட்டிடத்திற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் திட்ட அனுமதி பெறாமலும், நான்கு புறமும் இடைவெளி (set back) இடம் விடாமலும், வாகனங்கள் நிறுத்துவதற்கு (Car Parking) இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது (Nylon Complex) நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவுகள் 56 மற்றும் 57ன் உடன் படிக்கப்பட்ட பிரிவு 85 கீழ் Stop work notice/notice Calling for approved plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and Seal and demolition வழங்கி மற்றும் விரைவான நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் அவர்களை மிகவும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 13.01.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.02.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், மனுதாரர் தனது 13.02.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''எனது மேல்முறையீட்டு மனு எண் 13/மா/2025 நாள் 05.02.2026, விசாரணை 17.02.2026 தேதி முற்பகல் 11.45 மணிக்கு நடைபெறுவதாக அறிந்தேன். ஆனால் அன்றைய தேதியில் மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு எண் W.P. (MD) No.13944 of 2024 - 17.02.2026 வர இருப்பதால், அன்றைய தினம் விசாரணைக்கு நான் ஆஜராக இயலாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எனக்கு முதுகு தண்டுவடத்தில் வலி ஏற்பட்டுள்ளதால், நெடுந்தூரம் பயணம் செய்ய இயலாது. எனவே எனது ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டதை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

5. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் நகரமைப்பு ஆய்வாளர் 17.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் திரு.ஆர்.மயில்சாமி இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த 14.10.2024 நாளிட்ட மனு சம்மந்தமாக விளக்கம் அளிக்க வேறு ஒரு தேதி வழங்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மனுவின் நகல் மற்றும் இணைப்பு ஆகியவற்றின் நகல்களை பெற்றுக்கொண்டேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் கோரப்பட்ட கோரிக்கையினை ஏற்று, மனுதாரரின் 14.10.2024 நாளிட்ட முறையீட்டு மனு தொடர்பாக எதிர்மனுதாரருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.03.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.02.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. மனுதாரருக்கு நகல் அனுப்பப்பட்டது.

7. மனுதாரர் தனது 05.03.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"எனது 14.10.2024 தேதியிட்ட மனு வழக்கு எண் 13/மா/2025 மனு மீது விசாரணை 10.03.2025 தேதி முற்பகல் 11.15 மணி அளவில் மாண்புமிகு முறைமன்ற நடுவத்தில் விசாரணை நடைபெறுவதாக அறிவிப்பு நோட்டீஸ் பெறப்பட்டேன். ஆனால் அன்றைய தேதியில் 10.03.2026 முற்பகல் 10.30 மணியளவில் மூன்று வழக்குகள் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் (NIC) காணொலி காட்சி அரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் விசாரணை நடைபெறுவதால், அன்றைய தேதியில் மதுரையில் அஜராக வேண்டியுள்ளதால் நான் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தின் நேரடி விசாரணைக்கு ஆஜராக இயலாது சூழ்நிலை உள்ளதை கனிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே 14.10.2025–13/மா/2025 மேல்முறையீட்டு மனுவினை ஆவணத்தின் அடிப்படையில் உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்."

8. இந்நிலையில் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2–ன் உதவி ஆணையாளர் தனது 06.03.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"மனுதாரர் தனது 14.10.2024–ம் தேதிய விண்ணப்பத்தில் மதுரை மாநகராட்சி மண்டலம்–2, வார்டு எண் 1, புதுவிளாங்குடி சர்வே எண் 208 மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டித்தின் மீது சீல் வைக்கவும், நடவடிக்கை எடுக்கவும், ஆக்கிரமிப்பை அகற்றவும் கோரியுள்ளார்.

இது தொடர்பாக மனுதாரர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கில் மாண்பமை நீதிமன்ற உத்தரவில் மனுதாரரின் 14.10.2024 விண்ணப்பத்தை மனுதாரர் மற்றும் வழக்கின் 6–வது பிரதிவாதி ஆகியோருக்கு வாய்ப்பு அளித்து சட்டப்படி தகுதியின் அடிப்படையில் உரிய உத்தரவு பிறப்பிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

மாண்பமை நீதிமன்ற உத்தரவின்படி கட்டிட உரிமையாளர் திருமதி.ரூபல் ஷில்பா ஜெயின் அவர்களை உரிய ஆவணங்களுடன் 03.01.2025 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 28.12.2024 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டு அன்றைய தினம் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையின்போது மேற்படி இடத்தில் வணிக கட்டிடம் கட்ட 24.08.2006–ல் அப்போதைய விளாங்குடி சிறப்பு ஊராட்சி நிர்வாக அலுவலரிடம் கட்டிட அனுமதி பெற்ற வரைபடம் மற்றும் 1951–ம் ஆண்டு முதல் தற்போது வரை உள்ள கிரைய ஆவணங்களின் நகல் மற்றும் சொத்து வரிவிதிப்பு இரசீது ஆகியவற்றை சமர்ப்பித்து தமது பெயரில் பட்டா மாறுதல் செய்யப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மாண்பமை நீதிமன்ற உத்தரவின்படி 10.01.2025 அன்று உரிய ஆவணங்களுடன் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (வடக்கு)–லிருந்து 28.12.2024 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டு அன்றைய தினம் மனுதாரர் நேரில் ஆஜராகி மேற்படி நைலான் வணிக வளாக கட்டிடத்தை மூடி முத்திரை இடவும் அகற்றவும் கோரியிருந்தார்.

பிரஸ்தாப இடம் அமையும் புது விளாங்குடி ஊராட்சி 2011 ஆண்டு முதல் மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டது. மேற்படி கட்டிடம் 2006–ல் கட்டப்பட்டுள்ளது. விளாங்குடி பிட்.1 கிராம புல எண்.107/02–ல் (பழைய புல எண்.208/2) ர.பு. 1.63.5 ஹெக்டேர்

பரப்புள்ள நிலமானது, ஆணையாளர், மதுரை மாநகராட்சி அவர்களது பெயரில் பதிவாகியுள்ளது. மேற்படி நிலத்தில் தனி நபர்களால் கிரைய ஆவணங்களின் அடிப்படையில் சுமார் 300–க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் கட்டப்பட்டு குடியிருப்பாகவும் வணிக வளாகமாகவும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. தனி நபர்களால் எவ்வாறு இடம் கிரையம் கொடுக்கப்பட்டது என்பதை கண்டறியும் பொருட்டு UDR–க்கு முந்தைய “அ” பதிவேடு மற்றும் அடங்கலில் காணப்படும் பதிவுகளை பரிசீலிக்க வேண்டி அவற்றை அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது.

இந்நிலையில் கட்டிட உரிமையாளரின் கட்டிடத்தை 03.04.2025 அன்று ஆய்வு செய்ய 27.03.2025 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது. இதனை எதிர்த்து கட்டிட உரிமையாளர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண் W.P. (MD) No.12558/2025–ன் 13.06.2025 நாளிட்ட உத்தரவில் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 11.07.2025 அன்று மேற்படி கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டு கட்டிட அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மாறுதல்கள் குறித்த விவரத்துடன் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள், 2022 விதி 5(b)-ன் கீழ் கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்தும்படியும் அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்ட கட்டிடங்களை அகற்றும்படியும் 30.07.2025 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து 17.02.2026 நாளிட்ட இவ்வலுவலக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விபரத்தை தெரிவிக்கும்படியும் தவறினால் நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 56(2A)-ன் கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என கட்டிட உரிமையாளருக்கும், கட்டிடத்தில் உள்ள வாடகைதாரர்களுக்கும் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டு கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விபரத்தை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.”

9. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவிப் பொறியாளர் 10.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“17.02.2026 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் நகரமைப்பு ஆய்வாளர் அளித்த வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக பின்வரும் விவரங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் குறிப்பிட்ட வணிக வளாக கட்டிடம் தொடர்பாக மனுதாரர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கில் மாண்பமை நீதிமன்ற உத்தரவில் மனுதாரரின் 14.10.2024 விண்ணப்பத்தை மனுதாரர் மற்றும் வழக்கின் 6–வது பிரதிவாதி ஆகியோருக்கு வாய்ப்பு அளித்து சட்டப்படி தகுதியின் அடிப்படையில் உரிய உத்தரவு பிறப்பிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

மாண்பமை நீதிமன்ற உத்தரவின்படி கட்டிட உரிமையாளர் திருமதி.ரூபல் ஷில்பா ஜெயின் அவர்களை உரிய ஆவணங்களுடன் 03.01.2025 அன்று நேரடியாக விசாரணைக்கு ஆஜராகுமாறு 28.12.2024 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டு அன்றைய தினம் விசாரணை நடத்தப்பட்டது. மேற்படி இடத்தில் வணிக கட்டிடம் கட்ட 24.08.2006–ல் அப்போதைய விளாங்குடி சிறப்பு ஊராட்சி நிர்வாக அலுவலரிடம் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. புது விளாங்குடி சிறப்பு ஊராட்சி 2011 ஆண்டு முதல் மதுரை மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டது. மேற்கண்ட வணிக வளாகம் கட்டப்பட்டுள்ள விளாங்குடி கிராம புல எண்.107/02–ல் (பழைய புல எண்.208/2) 1.63.5 ஹெக்டேர்

பரப்புள்ள நிலமானது ஆணையாளர் மதுரை மாநகராட்சி பெயரில் பதிவு ஆகி உள்ளது. மேற்கண்ட நிலத்தில் தனிநபர்கள் கிரைய ஆவணங்கள் அடிப்படையில் குடியிருப்பு கட்டிடமாகவும், வணிக வளாக கட்டிடமாகவும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்கண்ட நிலத்தின் வகைப்பாடு குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிக்கை கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

இந்நிலையில் கட்டிட உரிமையாளரின் கட்டிடத்தை 03.04.2025 அன்று ஆய்வு செய்ய 27.03.2025 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது. இதனை எதிர்த்து கட்டிட உரிமையாளர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கை நீதிமன்றம் 13.06.2025 அன்று வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து 11.07.2025 அன்று மேற்படி கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டது. கள ஆய்வில் மேற்கண்ட வணிக வளாகம் 107 சதுரமீட்டர் அனுமதி பெற்று அனுமதிக்கு மாறாக 432 சதுரமீட்டர் தரைதளம் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் அனுமதி பெறாமல் 432 சதுரமீட்டர் அளவிற்கு முதல்தளம் கட்டப்பட்டுள்ளது. கட்டிட அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மாறுதல்கள் குறித்த விபரத்துடன் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022 விதி 5(b)-ன் கீழ் கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்தும்படியும் அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்ட கட்டிடங்களை அகற்றும்படியும் 30.07.2025 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து 17.02.2026 நாளிட்ட இவ்வலுவலக அறிவிப்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விபரத்தை தெரிவிக்கும்படியும் தவறினால் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56(2A)-ன் கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என கட்டிட உரிமையாளருக்கும், கட்டிடத்தில் உள்ள வாடகைதாரர்களுக்கும் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டு கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விபரத்தை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாக்கீதுகளின் நகல் மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் 13.06.2025 நாளிட்ட ஆணை நகல் ஆகியவற்றை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.''

10. முறையீட்டு மனுதாரரின் மனு, கடிதங்கள், எதிர்மனுதாரர் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு) வார்டு எண் 1 புதுவிளாங்குடி, மதுரை 18–ல் புதுவிளாங்குடி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை பேருந்து நிறுத்தத்திற்கு தெற்கு புறத்தில் கதவு எண் 108–ல் உள்ள நைலான் வணிக வளாகம் (Nylon Complex) கட்டிடமானது, மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான இடம் என்பதும், இந்த வணிக வளாகத்தில் முத்தூஃட் பைனான்ஸ், மீனாட்சி ஸ்வீட் & பேக்கரி, விசாலினி மகளிர் தையல் கடை, ஸ்ரீபார்வதி மெடிக்கல், யுவர்ஜாய்ஸ் சலூன் கடை, குளோபல் கம்ப்யூட்டர் சென்டர் மற்றும் சில கடைகள், மருத்துவமனைகள், வீடுகள் கட்டப்பட்டுள்ளது என்பதும், மாநகராட்சிக்கு சொந்தமான மேற்கண்ட இடத்தை ஆக்கிரமிப்பு செய்து, அக்கட்டிடத்திற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் திட்ட அனுமதி பெறாமலும், நான்கு புறமும் இடைவெளி (set back) இடம் விடாமலும், வாகனங்கள் நிறுத்துவதற்கு (Car Parking) இடம் விடாமல் கட்டப்பட்ட இக்கட்டிடத்தின் மீது நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவுகள் 56 மற்றும் 57ன் உடன் படிக்கப்பட்ட பிரிவு 85 கீழ் Stop work notice/notice Calling for approved plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி

முத்திரையிட்டும் Lock and Seal and demolition வழங்கி விரைவான நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறும், உரிய நடவடிக்கை எடுக்காத சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான கடுமையானஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் கடிதங்கள் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள வணிக வளாக கட்டிடம் தொடர்பாக, மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண் W.P. (MD) No.27379/2024–ன் உத்தரவில் மனுதாரரின் 14.10.2024 விண்ணப்பத்தை மனுதாரர் மற்றும் வழக்கின் 6–வது பிரதிவாதி (ரூபல்ஷில்பா ஜெயின்–கட்டிட உரிமையாளர்) ஆகியோருக்கு வாய்ப்பு அளித்து சட்டப்படி தகுதியின் அடிப்படையில் உரிய உத்தரவு பிறப்பிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, கட்டிட உரிமையாளரை உரிய ஆவணங்களுடன் நேரடியாக விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது என்பதும், மேற்படி இடத்தில் வணிக கட்டிடம் கட்ட அப்போதைய விளாங்குடி சிறப்பு ஊராட்சி நிர்வாக அலுவலரிடம் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும், புது விளாங்குடி சிறப்பு ஊராட்சி 2011 ஆண்டு முதல் மதுரை மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டது என்பதும், மேற்கண்ட வணிக வளாகம் கட்டப்பட்டுள்ள விளாங்குடி கிராம புல எண்.107/02–ல் (பழைய புல எண்.208/2) 1.63.5 ஹெக்டேர் பரப்புள்ள நிலமானது ஆணையாளர் மதுரை மாநகராட்சி பெயரில் பதிவு ஆகி உள்ளது என்பதும், மேற்கண்ட நிலத்தில் தனிநபர்கள் கிரைய ஆவணங்கள் அடிப்படையில் குடியிருப்பு கட்டிடமாகவும், வணிக வளாக கட்டிடமாகவும் பயன்பாட்டில் இருந்து வருவதால், மேற்கண்ட நிலத்தின் வகைப்பாடு குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்பதும், இந்நிலையில் கட்டிட உரிமையாளரின் கட்டிடத்தை ஆய்வு செய்ய அறிவிப்பு அனுப்பப்பட்டதை எதிர்த்து கட்டிட உரிமையாளர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண் W.P. (MD) No.12558/2025–ல், 13.06.2025 நாளிட்ட உத்தரவில் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டது தொடர்ந்து மேற்படி வணிக கட்டிடத்தின் கள ஆய்வில் அவ்வணிக வளாகம் 107 சதுரமீட்டர் அனுமதி பெற்று விட்டு, அனுமதிக்கு மாறாக 432 சதுரமீட்டர் தரைதளம் மற்றும் அனுமதி பெறாமல் 432 சதுர மீட்டருக்கு முதல் தளம் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், கட்டிட அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மாறுதல்கள் குறித்த விபரத்துடன் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022 விதி 5(b)-ன் கீழ் கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்தும்படியும் அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்ட கட்டிடங்களை அகற்றும்படியும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விபரத்தை தெரிவிக்கும்படியும் தவறினால் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56(2A)-ன் கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என கட்டிட உரிமையாளருக்கும், கட்டிடத்தில் உள்ள வாடகைதாரர்களுக்கும் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டு கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு), வார்டு எண் 1, புதுவிளாங்குடி, மதுரை 18–ல் புதுவிளாங்குடி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை பேருந்து நிறுத்தத்திற்கு தெற்கு புறத்தில் கதவு எண் 108–ல் திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட நைலான் வணிக வளாகம் (Nylon Complex) கட்டிடத்தின் உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களுக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56(2A)-ன் கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என கட்டிட உரிமையாளருக்கும், கட்டிடத்தில் உள்ள

வாடகைதாரர்களுக்கும் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டு கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971–ன்படியும் மற்றும் மாண்பமை உயர்நீதிமன்றம், உச்சநீதி மன்றம் ஆகியவை அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படியும், மேலும், வணிக வளாகம் அமைந்துள்ள இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதற்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இருந்து ஆவணங்களை பெற்று, அவ்வாணங்களின் ஆய்வின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளருக்கு அறிவுறுத்துமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து, இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் எண்.5, செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி, மதுரை.

(3) உதவி ஆணையாளர்,
மண்டலம்–2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை–625 007.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

10/4/26
செயலாளர்.
10/4/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032